செய்தி வெளியீடு எண்: 709 நாள்: 24.11.2012

# உலக சிக்கன நாள் விழா– 2012

சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தை வலியுறுத்த ஒவ்வொரு ஆண்டும் இந்தியா முழுவதும் அக்டோபர் 30ம் நாள் உலக சிக்கன நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்திலும் சிறுசேமிப்புத் துறையின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் உலக சிக்கன நாள் விழா சென்னை நகரில் மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையிலும், மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு, சிறுசேமிப்புத் துறையின் சார்பாக, 26.11.2012 அன்று பிற்பகல் 4.45 மணியளவில் சென்னை, தி.யாகராய நகர், கர்நாடக சங்க மேனிலைப்பள்ளியிலுள்ள டாக்டர் யு. ராமாராவ் கலா மண்டபத்தில் உலக சிக்கன நாள் விழா சிறப்பான அளவில் மாண்புமிகு சமுகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, விழாவினை தொடங்கி வைத்து, முகவர்கள், சம்பளப்பட்டியல் குழுத்தலைவர்கள், மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி விழாப் பேருரை ஆற்றுகிறார்.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா துவங்கவுள்ளது.

இவ்விழாவில் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கிய நிலை முகவர், மகளிர் முகவர்கள், மற்றும் சம்பளப்பட்டியல் சேமிப்புக் குழுத் தலைவர்களுக்கும், சிக்கனம் மற்றும் சிறுசேமிப்பு குறித்து பள்ளி மாணவ / மாணவியரிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவியர்களுக்கும், சென்னை நகரில் மாணவ / மாணவியரிடையே சிறுசேமிப்பு குறித்து நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, நடனப் போட்டி, நாடகப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளில் மாவட்ட அளவில் சிறந்து விளங்கிய மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கும் பரிசுகளை மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்கள் வழங்குகிறார்.

இவ்விழாவில் தமிழக அரசின் நிதித்துறை முதன்மைச் செயலர், திரு. க.சண்முகம், இ.ஆ.ப அவர்களும், அஞ்சல் துறை இயக்குநர் செல்வி சுமிதா அயோதியா, இ.அ.ப. அவர்களும், கர்நாடக சங்க மேனிலைப்பள்ளி, தாளாளர் திரு. பி.எல்.ஆச்சார் அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

முன்னதாக இவ்விழாவில் சிறுசேமிப்புத் துறை இயக்குநர் டாக்டர் பு. உமாநாத் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நல்குகிறார். இறுதியில் சிறுசேமிப்புத்துறை இணை இயக்குநர் திரு.க.வேல்முருகன் அவர்கள் நன்றி கூறுகிறார்.

இணை இயக்குநர்
சிறுசேமிப்புத் துறை
சென்னை– 2.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**